மாற்றங்கள் என்ன ஏற்படும் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எழுதப்பட்ட பிறகு அப்பீல் செய்துகொள்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு விநாயகம் அவர்களுக்காக ஒன்று சொல்கிறேன். நம்முடைய தீர்ப்பிலே Members should put short questions to enable the Minister to remember all the points contained in them and answer them என்று இருக்கிறது. எனவே, கேள்விகளைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** என்னை ஆங்கிலத்திலே போடச் சொல்லுங்கள். ஷார்ட் ஆகப் போடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆங்கிலத்திலே போடுங்கள், போட வேண்டாமென்று நான் ரூலிங் கொடுக்கவில்லையே. என்ன, என்ன கேட்க வேண்டுமென்பதைச் சுருக்கமாகச் சொன்னால் தான் முதலமைச்சர் மனதில் வைத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும்.

**திரு. கே. விநாயகம் :** அவர்கள் என்னைவிட கெட்டிக்காரர்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஐந்தாவது நிதிக் கமிஷன் வந்த பிறகு இரண்டாவது பே கமிஷன் வைப்பதாகச் சொன்னார்கள். அது வருடக் கணக்கில் ஆகும். டெய்லி அலவன்ஸைப் பொறுத்தவரையில் ஒரு நாளைக்குப் பழைய காலத்தில் இருந்த நிலையிலேயே ஒரு ரூபாய், ஒன்றே கால் ரூபாய் என்ற அளவுக்குத்தான் இன்னும் கொடுக்கிறார்கள். ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே 2 ரூபாய் 3 ரூபாய் ஆகிவிடுகிறது. இப்படி ஒன்றேகால் ரூபாய் என்று குறைவாக வழங்குவதால்தான் லஞ்ச ஊழல் ஏற்படுகிறது. ஆகவே உடனடியாக டெய்லி அலவன்ஸையாவது உயர்த்தக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நிதிக் குழு பற்றிச் சொல்லும் பொழுது பல ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள், அப்படியொன்றும் இல்லை, அடுத்த ஜூலை மாதத்திலே வரலாம். அப்படியொன்றும் பரிசிலனையில் தற்பொழுது இல்லை.

### கோவை நகரில் தீ விபத்து

* 251 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1968-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோவை நகரில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். கோயம்புத்தூர் நகர் ராம்நகருக்கு அருகேயுள்ள ரங்கநாதபுரத்தில் 4-6-1968 அன்று பகல் 1-45 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது.

(இ) மேற்படி தீ விபத்தில் 130 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, அப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உதவித் தொகை என்ன ? வீடு இழந்தவர்களுக்கு தீப் பிடிக்காமல் இருக்கக் கூடிய வீடுகளை அரசாங்கம் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிசைகளைக் கட்டிக்கொள்வதற்காக ரூ. 8,850 அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS